1409

உ

ஓம்.

1409
4.22

1 2 DEC 1922

# இந்து சரித்திர கும்மி

இஃது

கிருஷ்ணவதாரரஹஸ்யம், சர்வமத தோத்திரம், கீதாமாலை, அருசசு நசங்யாசி, தேசபக்தாம்ருதம் முதலிய ஆரிய தமிழ் நூல்களின் ஆசிரியரான

ஜே. வேங்கிடசுப்ரம்ஹண்ய பாரதியாரால்

பாடப்பெற்று

சிறந்த தேசாபிமானியும் ஆசார சீலருமான சீப்பளாபுத்தூர்

மகா-ள-ள-ஸ்ரீ ராமகிருஷ்ண சாஸ்திரியாரால்

ப்ரசுரிக்கப்பட்டது.

**1922**

(All Rights Reserved.) Price 2 As.

T. C. P. & P. Society, Ltd., Trichy.

உ

ஜே. வேங்கிடசுப்ரம்ஹண்ய பாரதியாரால்,

பாடப்பெற்ற

# இந்துசரித்திரகும்மி

## விருத்தம்.

பாற்கடலில் அமுதெனவே எழுந்து பொங்கி
பார்க்கொளியும் களிப்பளித்துப் பகரவொண்ணு
சீர்த்திமிகு பாரதிப்பேர் தேவிகாதை
ஆர்த்திடவே அருளுவையே அம்மையேநீ!

# கும்மி.

1. சோதிச் சுடரொளி சோதரி ஆதரி
சொற்பொருள் சீராகச் சேரவுமே
ஆதியருந்துணையாக வெனைக்காத்த
அற்புதமாம்கலை வாணியரே.

2. நீயும் இலக்குமி நின்றிலங்கும் தேசம்
நீடு புகழ் பெற்ற நீதி தேசம்
பாயும் நதி பலபெற்று மலையதில்
தூயயதி துயர் தீரும் தேசம்.

3. தாய் இன்பநீர் வாணி தமிழ் தெலுங்கிந்துஸ்
தானி பெங்காலி நல் இந்திமுதல்
ஆய இன்னும் பலவாய்கள் உனைப்போற்ற
யானுமுன்றன் புகழ் பாடினேனே.

4. வேத முண்டானதும் உன்னகத்தில் நாத
கீத முண்டானதும் உன்னகத்தில்
ஆதியவதரித்தாண்டதும் பார்புகழ்
நீதிமன்னர் ஆண்டார் இந்நாட்டில்.

5. சங்கரர் சீர்மனுவ்யாச பராசரர்
சால முனிவரர் காளிதாசன்
துங்க அகத்தியர் கம்பர் குறள்முனி
தாயுமானவர் தரித்தவிடம்

## இந்து ராணியின் பீடம்.

6. ஞான அரசி இமாலயத்தில் சச்சி
தானந்தனோடு கொலுவிருந்தாள்
கானமுகில் தங்கும் விந்தியம் சாத்பூரா
நீலகிரியும் குமரிவரை

7. எழில் படிகளும் ஹாலாய் சுலேமான்
யோமா மேற்கு கிழக்குத்தொடர்
நிழல் மரங்கள் பலகொண்ட கைப்பிடி
நின்மலி இன்ப்ச் சிங்காதனமே

8. மூரி இந்து வங்காளம் அரபிக்கடல்
முப்புரம் சூழ்ந்த சிங்காதனமே
சூரிய சந்திரர் நாண் விளங்கும் கட்டிற்
சூடிய ரத்ன சிங்காதனமே.

9. ரவிமதி மறை பாண்டியராம் ஹம்பி
ராயர் சேரர் சோழர் பல்லவர்கள்
புவி புகழுஞ்சீர் மாரியர் குப்தர்பல்
பூபதிகள் திறை பெற்றவளே.

10. நீரரண் உயர் வரை யரண் அதில்
நீள்மரங்கள் பெற்ற கான அரண்
வீரர்கள் முப்பத்தி முக்கோடியாய் பலம்
விளங்கும் காப்புடை வித்தகியே

11. பத்தர் முனிவர் இசைபாடத் தென்றல்
பாங்காய் அவர்க்கு ஸ்ருதிகூட
மத்தளம் மூரி மகிழ்புலன்களில்
மாமறை யாட்கள் நடமாட...

12. இந்திரர் தேவர்கள் மூவர்கள் உம்பர்இவ்
இன்னியகீதம் கேட்டுமகிழ
வந்தவதாரமாய் வானுலகம்காத்து
வசித்த வானவர் நாடிதுவே.

## நீர் வளம்.

13. கங்கை, ப்ரம்மபுத்ரா சிந்துமஹாநதி
க்ருஷ்ணு கோதாவரி காவிரீயாம்
வைகை, தப்தி நர்மதை நதிகள் செழிப்
பைதரும் பொன்விளை நாடிதுவே.

## முக்கிய பட்டணங்கள்.

14. டில்லி லக்னோ ஆக்ரா, பாட்ணு, காசி, கயா
டேக்கா கான்பூர் மீரட் நாலந்தா
அல்லஹா பாத்பூரி நாக்பூர் பூனு லாகூர்
அலிக்ரா, ஜான்ஸி, பரோடா, மிடபாத்

15. ஜிஞ்சி, உஜ்னி, காசி, கஞ்சி, வந்தவாசி,
சிதம்பரம், கைலை, மதுரைப்பதி
தஞ்சை, ஹம்பி, ப்ளாசி, பங்களூரும் கல்கத்
தா, மதராஸ், பம்பாய், ஸ்ரீரங்கம்.

## அரசர்.

16. ஸ்ரீராமக்ருஷ்ணர், அரிச்சந்த்ரர், பாண்டவர்
சிபி, பாதர் சிரோண்மணிகள்
சீராம்சந்த்ரகுப்தன் அசோகன் ஆதித்யன்
சமுத்ரகுப்தன், கனிஷ்கன் ஹர்ஷன்

17. க்ருஷ்ணதேவர் ராஜ ராஜர் சுந்த்ர பாண்ட்யர்
கீர்த்திமிகு சித்தூர் ஜான்ஸி வீரர்
க்ருஷ்ணகுமாரி சிவாஜி நாஞசஞ்சிட்
க்ரீடம் போல் நாட்டை அலங்கரித்தார்.

## இந்தின் தோன்மை.

18. பனிக்கிரியனெப்பண்டில் இமாலயம்
படைத்திருப்பானே பாகீரதி
நனி இழிந்து மாசாகரம் நுங்கியோர்
நற்கதிபெற்ற நன்னாளறியோம்

19. எத்தனை கோடி எழில்மகுடர் இவ்
வேத உலகில் விளங்கினரோ
எத்தனை கோடி யுகங்களாய் பாரதி
ஏற்ற உலகில் விளங்குவதோ.

20. ஆரியவர்த்தத்தின் ஆழ்மிகை செல்வமும்
அரியகல்வி வீரம் நல்லறமும்
கூறும்வேதம் ராம்காதை சீர்பாரதம்
கூறரியநல்ல க்ரந்தங்களும்.

21. ஆரியர் கர்மத்தின் காரணமாய் நான்கு
சாதியாகப் பிரிந்தினிது
சீரியவேதியர் வீர்யக்ஷத்ரீயர் வ்யா
பார்யவைஸ்யர் சூத்ரம் கற்போரானர்.

22. நாவாய் முதற்செய்தோம் நம்மிடம் கற்றோர்
பொனிஷியர்கள் பின்புக்ரேகர் ரோமர்
பாவைமேல் ஈஜிப்டில் பகட்டும்டேக்கா நம்மின்
பாஷைகள் ஹீப்ருபைபிள்மொழியும்.

இராகம் நாதநாமக்ரியை.

தாளம் ஜம்பை.

தன்னன தானு-தன்னன-தன்னன தானு-
தன்னன-தன்னன-தன்னன-தன்னன-தன்னன-
தன்னன-தன்னன-தன்னன-தன்னன-தானு

1. வந்துதித்தோமே பாரதநாட்டில் (வந்)
வந்தேமாதரமென்று வாயாரவாழ்த்தியே
உந்தேன் தேசபக்தியை உள்ளத்தில் ஊற்றியே
(வந்)

2. ஜன்மசாபல்யம் எனும் இந்த
கன்மஞானபூமி சேரவருள் நன்மதியாலே
இகபாசாதகம் இடமகல் மறைகற்றுத்
தகைமை ஞான ஒளியால்
தகைவன் தண்ணடிசேர (வந்

3\. பண்டுயர் நாடு பாரின்புகழ்
வென்றதோர்நாடு அஞ்ஞானத்தைத்தின்றதோர்
நாடு
கண்டுதேன் அமுதெனக் கானஞ்செய்
தேத்திடும்
அண்டர் முனி அரசர் அற்புதவீரர்
போற்ற அணிதரும் நாடு

4\. ஆனந்தநாடு அளவிலாத் தானஞ்செய் நாடு
ஞானக்கனி ஈனுமின்னாடு
மோனவடிவாம் வ்யாசர் யக்ஞ வல்கிகள்
வானவரும் வியக்க வழங்கிய
வான்புகழ் மன்னரின் நாடு வந்

5\. கையில் கற்பகமே கருணையகம்
மெய்த்திருமாலே மிளிர்முகம் செய்யதாமரை
யாள்
வாக்கில் கருணைவாணி நோக்கில் பராசக்திசேர்
தூக்கில் இந்தே உனைப்போல்
பாக்கியவதியுண்டோ வந்து

6. வேதபுராணம் இதிகாசங்கள் ஓதுசாத்திரங்கள்
தொழில் நூல்கள் ஆதாரவான
அற்புத நூலேய்து அருமைத்தொழில் நடத்தி
கற்பாசிகள் மலிந்து கர்ணன் குபேரனாய்
களிதந்த நாடு

7. ஆரியர்நாமே அனைவரும் சீரியர்தாமே
திலகர் கூறும் ஆர்டிக்ஹோமே
பெருமை இந்து நேசராய் பேர்மகிழ்ச்சியுடனே
உரிமையுடனே உயர் இந்தினைப் பாடுவோம்
வந்தேமாதரமே.

8. ரோம் க்ரீஸ் ஈஜிப்ட் டோடும் புகழ்
ஓங்கித்தழைத்தும் இளமையுடன்
ஈங்கு முயர்ந்தும்
ஆங்கில ஜெர்மன், அமெரிக்கர் ஜப்பானில்
வீங்கிடும் நாளும் வியக்க வீரருடனே விளங்
கும் என் மாதே

9. புத்தர் புனிதர் நிர்வாணத்தின் சித்தர்
சிரேஷ்டர் இந்தின்பேர் உத்தமவீரர்
பத்தியோடவர்பாதம் பாடும் பல்கோடியுடன்
சக்திவல்லவனே பாரதியின் புதல்வனெனப்
பாடி மகிழ்வாம்.

10. சந்த்ரகுப்தர் ஜயசீலர் உவந்புரசாண்டார்
வாழ்மனுநீதி முந்தஹம்வைத்து
முப்பிணி ஐபயம் முறியடித்தாண்டதை
சொற்பமாக மகாஸ்தனிஸ் சொல்வதைநீயும்
சோதித்துப் பாராய்.

11. சோகஹரணர் சோதிமயம் அசோகர்
ஆண்டாரே முப்பக்தி அறம் ஆகபூவெங்கும்
தூபிகளும் கற்றூண்கள் வேதம் உமிழ
தாபனம் செய்தார் சாக்கியரின் மதத்தையே
சக்திவல்லாரே

12 பாரிலிவர்போல் பழுதிலா பார்த்திபர் அரிது
நீதிமதம் பேர்விளக்கியவர்

பிக்ஷாவாகவே தேசாடனஞ்செய்துப்ராஜ
களின்
இஷ்டம் நிறைந்து இனிமையாய்பாடவே
இந்தையாண்டாரே.

13. விக்ரமாதித்தியன் வீரன் மன்னன் அக்ரமர்
நாசன் அதிசய பாராக்ரமநேசன்
வாகை நிறைந்த மன்னர் வணங்கும் வயமா
ஜெயம்
ஆகி அஸ்வமேதப்பேர் யாகத்தை முடித்தவன்
அணிகலமாவான்

14. பாஹ்பன் ஹூயண்ட சாங்சொல்வர் அ-நேக
விதமாய் கீர்த்திபெற்ற நம் ஈகை வீரத்வம்
இந்து சகோதரர் இணைபற்றி லங்கிநன்கு
வித்தை வீரர்கவிகள் எய்தி விளங்கியதை
விவரித்துப்பாராய்

15. ஹர்ஷவர்த்தனனே கர்னனுண புருஷசிங்கனே
புகழைந்து வருஷமோர் தினமே
கர்னனும் நாணத்தன் கற்பகக்கையால்
ஸ்வர்ணம்ப்ரயாகையில் சுரந்து கொடுத்ததைச்
சுட்டிச்சொல் சீராய்

16. சங்கரர்வித்யா சாகரர்சாந்தர் துங்கஅத்வைதர்
அவதாரர் மங்களநாதர்
சங்கையிலாசாஸ்த்ரம், வேதம் காவியங்கள்
பொங்கிக்கமிழ்ந்து புனிதமுறச்செய்த புண்ய
புருஷர்

17. காளிதாசன் சொல் கவிதையைப்போல்
களிப்பெய்தி நல்கும் பாரதியின் செழிப்பை
யுரைததான்
மேனாட்டுக்கவிகள் மாக்ஸ் மில்லர் இனி
இல்லென்று
நானுவிதமாய் நமது புகழ்நாட்ட நற்கவிவந்தார்

18. கம்பரின் கவிதை கற்ற நல்ல உம்பர்க்குமறிதே
உயர்புகழ் தங்குதார் மார்பன்
கலையினுருவாய் கவிகமழ்ந்து மகிழச்
சிலையிராமனின் சீர்த்தியுரைத்தனன்
சீர்த்தியின் வல்லான்.

19. பத்மாவதீயம் பகருமிந்த உத்தமிசரிதை
ராஜபுத்திர பத்மினி சீரெ
கலியிலனசூயா காணுதவர்க்கு வீர
சலியாபீம் சிங்கிற்கு ஈந்தநேசமே காட்டும்
சந்ததம் வாழ்வாள்.

20. தென்னவர் புகழும் அன்னோர்செய்த
கப்பல்வாணியமும் கல்விவளம் சங்கத்தின்
பேரும்
சோழன் கப்பற்படை சொல்லுக்கரியஅறம்
சேரன் மலைவளம் ஈகையும் என்றனல்
செப்புதல் ஆமோ?

## முகல் மன்னர்.

21. முகலாயச்செல்வன் மஹாஅக்பர்
பகைநொடி வெல்வன் பகாரு தகை இந்து
நண்பன்
இந்து மஹம்மதியர் இரு கண் என மதித்து
உகந்தாசாண்டதை அபின் அக்பரிசொலும்
அத்தைப் பார்த்தறிவாய்

22. ஷாஜிஹான் பெருமை கட்டிடங்கள்
தாஜ்மஹால் சொல்லும்
மயிலாசனம் மாட்சிமையாக
முகலாயமன்னர் முழுங்காசாக்ஷியில்
அகமகிழ்ந்திந்தியர் ஆதரவுடன் வாழ்ந்தார்
அறிவாய் நீதோழீ.

23. அவுரங்கஜீபு அதிசய சௌரியமுள்ளோன்
ராஜனுக்குள்ள கௌரவம் நீந்தோன்
யார்கொல் குல்லா முடைந்து கொரான்
எழுதிப்பிழைத்து
பார் வியக்கக் குடிகள் பணத்தைத்தொடா
தொரு பார்த்திபன் சொல்லாய்.

24. சிவஜி சிறந்தோன் பூனு செய்ததவத்தில்
பிறந்தோன் இந்திரன் வீரம் விளக்கவந்தோன்
அற்புத வீரன் மஹாராஷ்டிரனே
சொற்பகாலத்தில் சோதிராஜ்யம்செயித்தோன்
சோர்விலாசூரன்

25. கல்பம் ப்ரளயம் கதிதரும் சொற்பம்
நிறைவு சேர்ந்த உலகம் கற்பிதமான
இந்தின் மாண்மை சற்று
இழியும் காலம் வாச்சு
தந்திர மின்றியே அயலார் கைப்பட்டது
அறிவாய் நீ தோழீ

26. சக்கிரம் சுழல செல்வம் தொழில்தான் பொங்கி
வளர இந்தின்ஞானமும் வீரமும் எழில்
மனுநீதி ஓங்கிட மன்னுயிர் தாங்கிட
இனும்பலகலை மலிந்தொழிலெய்த நாளின்சீர்
எற்கடங்காதே

27. போர்ச்சுகீஸ், டட்சர், பிரான்ஸுகாரர் ஐரோப்
பியர் போந்தார் ஆங்கிலரும் அங்ஙனம் வந்தார்
வாணிபம், தந்திரம் வகையான வழிகளால்
நாமேநமிற்பொருதவிட்டு நாட்டைப்பற்றி
நாட்டினர் கொடியை

28. க்ளைவ் ஹேஸ்டிங்ஸ் வெல்ஸ்லி பெண்டிங்குடன்
கைசேர்டல் ஹௌஸி கானிங்துரை
ஐநாரீஸ்வீரர்
ரிப்பன், எலன்ம்ரோகர்சான் ஹார்டிங்குச்
செம்சுபோர்ட்
இப்பெருமாங்கில் இணையில் வீரரைப்பாட
[வந்

29. ஆங்கிலஆட்சி ஜனங்களாய் தாங்கிடும் மாட்சி
தகைபெறு தங்குசுயாட்சி
இந்தும் ஜெயக்கொடிகீழ் இணையில் சுயேச்சை
யாக
வந்தே மாதரமென்று வணங்கித் தொண்டு
செய்யவே (வந்

30. பாரதரேநீர் பண்டைப்புகழ் பற்றுவரேமேல்
பகையின்றி
வீரமுடனேவாரீர் காயமெண்ணுமலே
சாந்தமுறுவீர்
சாரமான ஆத்மசக்தியிருக்குது
சாஸ்வதம் அதுவே !

31. போர்முனைபொன்று எத்திறத்தினும்
பொலிவுறுகாந்தி உமதுள்ளே
பொருந்து நல் ஒளியே !
அவ்வொளி நோக்கியே ஆனந்தமாகவே
அத்வைத நிச்சய நிச்சலத்தில் சேர்வோம்.
ஓம்! ஓம் சிவோகம்.

# ஷி பாரதியாரின் அரியநூல்கள்!

தமிழன்பர்களே! ஆதரியுங்கள்.

1. அருச்சுன சந்யாசி நன்னடையில் நாடக அலங்காரத்துடன் எழுதப்பெற்று, மதராஸ் பாட புத்தகசபையாரால் (Text-book Committee) சிபார்சு செய்யப்பட்டது. சில காப்பிகளே கையில் உள்ளன முந்துங்கள். விலை அணா 8.
2. கிருஷ்ணாவதார ரஹஸ்யம் விலை 0—1—6
3. சர்வ சமய தோத்திரங்கள், இது பள்ளிக்கூடங்களில் தோத்திர பாடங்களுக்கு (Prayer Class) உபயோகப்படுத்தப்படுகிறது. இந்து சமயக் கொள்கைகள், சர்வ சமயாசாரிகள். காலை, மாலை வணக்கம், சர்வ மதாசாரம், கீதா சாரம் முதலிய முக்யமான விஷயங்களடங்கியது. விலை 0—2—0.

கிடைக்குமிடம்:

**J. V. சுப்ரமணிய பாரதியார்,**

காட்டுப்புத்தூர் (திருச்சி ஜில்லா).